மொழிப் பாடம் - தமிழ் -தாள் -3 (S1TL31)

மூன்றாம் பருவம்  இணைய வகுப்பு 03

# யாப்பிலக்கணம்

**முனைவர்  பா. மலர்,**
**உதவிப் பேராசிரியர்,**
தமிழ்க் கலை  ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,
நாகர்கோவில் - 2

# இந்த வகுப்பில்

- தளை
- தளை - வகைகள்

# திறவுச் சொற்கள்

- தளை
- ஒன்றிய தளை
- ஒன்றா தளை



# குறு வினா

- தளை என்றால் என்ன?
- ஒன்றிய தளைகள் எவை ?
- ஒன்றா தளைகள் என்றால் என்ன?
- கலித்தளை - விளக்குக .
- ஆசிரிய தளைகள் எவை ?

# பெரு வினாக்கள்

- தளைகள் எத்தனை ? சான்றுகளுடன் விளக்குக.

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# தளை

- சீர்கள் ஒன்றுடன் ஒன்று இயைந்து கட்டுப்பட்டு நிற்பது தளை எனப்படும்.
- தளை என்பதற்குப் பிணைத்தல் அல்லது கட்டுதல் என்பது பொருள்.
- சீரும் சீரும் சேர்ந்து ஒலிக்கிற பொழுது தோன்றுவது தளை.

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# தளை – ஒரு சான்று





முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம், தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2


# தளை இலக்கணம்

- முதற்சீரின் கடைசி அசையும் வரும் சீரின் முதல் அசையும் கூடும் நிலையில்தான் இத் தளை அமைகிறது.
- முதல் சீர், யாப்பில் ‘நின்றசீர்’ என்னும் சொல்லால் குறிக்கப்படும். அதை அடுத்து வரும்சீர், ‘வரும்சீர்’ என்று சுட்டப்பெறும்.
- ஓர் அடியில் நான்கு சீர் உள்ளன என்றால், இடையே மூன்று தளைகள் தோன்றும்.


முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம், தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# ஏழு தளைகள்

- 1. நேரொன்றாசிரியத் தளை,
- 2. நிரையொன்றாசிரியத் தளை,
- 3. இயற்சீர் வெண்டளை,
- 4. வெண்சீர் வெண்டளை,
- 5. கலித்தளை,
- 6. ஒன்றிய வஞ்சித்தளை,
- 7. ஒன்றாத வஞ்சித்தளை



# ஆசிரியத் தளைகள்

- ஆசிரியப்பாவில் வரும் தளைகள் ஆசிரியத் தளைகள் எனப்படும். அவை,

1. நேரொன்று ஆசிரியத் தளை
2. நிரையொன்று ஆசிரியத் தளை

# நேரொன்று ஆசிரியத் தளை

- மா முன் நேர்
- தேமா, புளிமா என்னும் ஈரசைச் சீர்கள் இரண்டையும் மாச்சீர் எனக் கூறலாம்.
- நின்றசீர் மாச்சீராக இருந்து வரும் சீரின் முதலசை ‘நேர்’ என இருந்தால் பிறப்பது நேரொன்று ஆசிரியத் தளை

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# நேரொன்று ஆசிரியத் தளை சான்று

- அன்பும் பண்பும்
  நின்றசீர் வரும்சீர்
- அன் /பும் பண்/பும்
- நேர் நேர் + நேர்(வரும்சீரின் முதலசை)
- தேமா முன் நேர் (மா முன் நேர்)
- நேரும் நேரும் ஒன்றியதால் நேரொன்று ஆசிரியத் தளை

(மா முன் நேர்)

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

## நேரொன்று ஆசிரியத் தளை சான்று

- அருளும் பண்பும்

  நின்றசீர் வரும்சீர்
- அரு / ளும் பண்/ பும்
- நிரை நேர் + நேர்(வரும்சீரின் முதலசை)
- புளிமா முன் நேர் (மா முன் நேர்)
- நேரும் நேரும் ஒன்றியதால் நேரொன்று

  ஆசிரியத் தளை (மா முன் நேர்)

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

## நிரையொன்று ஆசிரியத் தளை

- கருவிளம், கூவிளம் என்னும் ஈரசைச் சீர்கள் இரண்டையும் விளச்சீர் எனலாம்.
- நின்றசீர் விளச்சீராக இருந்து, வரும் சீரின் முதலசை 'நிரை' என இருந்தால் பிறப்பது நிரையொன்று ஆசிரியத் தளை (விளமுன் நிரை)

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# நிரையொன்று ஆசிரியத் தளை சான்று

- அன்பினால் அரவணை
- நின்றசீர் வரும்சீர்
- அன் /பினால் அர/வணை
- நேர் நிரை + நிரை (கூவிளம் முன் நிரை)
- பலர்புகழ் கபிலர்
- நின்றசீர் வரும்சீர்
- பலர் / புகழ் கபி /லர்
- நிரை / நிரை + நிரை (கருவிளம் + நிரை)
- விளச்சீர் முன் நிரை = நிரையொன்று ஆசிரியத் தளை

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# வெண்டளை

- வெண்பாவிற்கு உரிய தளை.
- இது இரு வகைப்படும்.
- 1.இயற்சீர் வெண்டளை
- 2.வெண்சீர் வெண்டளை

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# 1.இயற்சீர் வெண்டளை

- மாச்சீர் (தேமா,புளிமா) முன் ‘நிரை’ வரினும்
- விளச்சீர் (கருவிளம்,கூவிளம்) முன் ‘நேர் வரினும்
- இயற்சீர் வெண்டளை
- மாமுன் நிரை,விளமுன் நேர்

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# இயற்சீர் வெண்டளை

- நுண் / மாண் நுழை / புலம்

  நேர் / நேர் + நிரை /

  தேமா + நிரை (மா முன் நிரை)

- பெருங் / கடல் நீந் / துவர்

  நிரை நிரை நேர்

  கருவிளம் + நேர் (விளம் முன் நேர்)

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# 2.வெண்சீர் வெண்டளை

வெண்பாவிற்கு உரிய தளை.

மூவசைச்சீர்களான

காய்ச்சீர்(தேமாங்காய்,புளிமாங்காய் ,

கருவிளங்காய் , கூவிளங்காய் ) முன்னர்

வரும் சீரில் முதலசை நேரசை வந்தால்

அது வெண்சீர் வெண்டளை.

காய் முன் நேர்



# 2.வெண்சீர் வெண்டளை

- *யா/தா /னும் நா /டா/மால்*
- நேர் நேர் நேர் நேர்
- தேமாங்காய் + நேர்
- காய் முன் நேர்

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# வெண்டளை

- 1.இயற்சீர் வெண்டளை
  - மாமுன் நிரை,விளமுன் நேர்
- 2.வெண்சீர் வெண்டளை
  - காய் முன் நேர்



# வஞ்சித்தளை

- வஞ்சிப்பாவில் அமையும் தளை.
- இது இரு வகைப்படும்.

1. ஒன்றிய வஞ்சித்தளை
2. ஒன்றா வஞ்சித்தளை

# ஒன்றிய வஞ்சித்தளை

- நிரையசையில் முடியும் மூவசைச்சீர் நான்கும் (தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி ) கனிச்சீர் எனப்படும்.
- இவை நின்ற சீராக இருக்க, வரும்சீரின் முதலசை நிரை என இருப்பின் ஒன்றிய வஞ்சித்தளை (கனி முன் நிரை)



# ஒன்றிய வஞ்சித்தளை

- நின்ற சீர் வரும்சீர்
- வெண்/சா/மரை புடை/பெயர்/தரச்
  நேர் நேர் நிரை நிரை
- தேமாங்கனி + நிரை
- கனி முன் நிரை

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# ஒன்றாத வஞ்சித்தளை

- நிரையசையில் முடியும் மூவசைச்சீர் நான்கும் (தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி ) கனிச்சீர் எனப்படும்.
- இவை நின்றசீராக இருக்க, வரும்சீரின் முதலசை நேரசையாக இருப்பின் ஒன்றாத வஞ்சித்தளை . (கனி முன் நேர்)

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# ஒன்றாத வஞ்சித்தளை

- நின்ற சீர          வரும்சீர்
- மந்/தா/நிலம்    வந்/தசைப்/ப

நேர் நேர் நிரை    நேர்

தேமாங்கனி    + நேர்

- (கனி முன் நேர்)

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# கலித்தளை

- நேர் அசையில் முடியும் மூவசைச்சீர் (தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் கூவிளங்காய்) நான்கும் வெண்பாவிற்குரியன.
- இவற்றின் முன் நிரையசை வந்தால் கலித்தளை. கலிப்பாவிற்கு உரிய தளை.
- காய்ச்சீர், நின்றசீராக இருக்க வரும்சீரின் முதலசையாக நிரையசை இருப்பின் கலித்தளை

(காய் முன் நிரை)



# கலித்தளை

| நின்றசீர் | | வரும்சீர் |
|---|---|---|
| *நீராருங்* | | *கடலுடுத்த* |
| நீ / ரா / ருங் | | கட /லுடுத் / த |
| நேர் நேர் நேர் | | நிரை |
| தேமாங்காய் | + | நிரை |

- (காய் முன் நிரை)

# ஒன்றிய தளைகள்

- நேரொன்று ஆசிரியத் தளை
- நிரையொன்று ஆசிரியத் தளை
- வெண்சீர் வெண்டளை
- ஒன்றிய வஞ்சித்தளை

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2

# ஒன்றாத தளைகள்

- இயற்சீர் வெண்டளை
- ஒன்றாத வஞ்சித்தளை
- கலித்தளை

முனைவர் பா. மலர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்க் கலை ஆய்வகம் , தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 2